செய்தி வெளியீடு எண் : 090 நாள் : 21.02.2015

# உலகத் தாய்மொழி நாள் 21.02.2015

தமிழ்நாடு அரசு சார்பாக உலகத் தாய்மொழி நாள் 21.02.2015 அன்று சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியக வளாகத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் தமிழ் வளர்ச்சித் துறையால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்கள் கலந்து கொண்டு தலைமையுரை ஆற்றினார். அவர் பேசும் போது மாண்புமிகு புரட்சிதலைவி அம்மா அவர்கள்தான் உலகத் தாய்மொழி நாள் கொண்டாட வேண்டுமென்று முதன்முதலாக ஆணையிட்டார்கள் என்பதனை மிகவும் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். மேலும் தமிழக வரலாற்றிலேயே தமிழ்மொழிக்காக ரூ.300 கோடி நிதியை ஒதுக்கீடு செய்ததும் அம்மாவின் அரசுதான் என்றும் திராவிடமொழிக் குடும்பத்திலுள்ள மொழிகளுக்கு மட்டுமல்லாமல் உலக மொழிகளுக்கே தாய்மொழியாக இருப்பதும் தமிழ்மொழிதான் என்றும் குறிப்பிட்டார் இத்தகைய சிறப்பு மிக்க நம் தாய்மொழியைப் போற்ற வேண்டும் என்று கூறியதோடு தமிழிலேயே பேசவும் எழுதவும் இந்நன்நாளில் உறுதியேற்போம் என்று பேசினார்.

அண்மைக் காலத்தில் பரவலாகப் பயன்படுத்தப்படும் சமூக வலைத்தளமான தமிழ் ‘டிவிட்டரில்’ இந்திய அளவில் ‘‘தமிழ் வாழ்க’’ என்பது அதிக மக்களின் வரவேற்பு பெற்று இந்திய அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.

அதுபோல், தமிழ் விக்கிபீடியா வலைதளத்தை ஒரு நாளில் – அதாவது 24 மணி நேரத்தில் கிட்டத்தட்ட 2 இலட்சம் பேர் படிக்கின்றனர். இந்தி மொழி விக்கிபீடியா வலைதளத்தை சுமார் 3 இலட்சம் பேர் படிக்கின்றனர். இதைப் போன்று காலத்திற்கேற்ற வகையில், இணையத்தில் பிற மொழிகளுக்கு இணையாகத் தமிழ்மொழி பயன்பாட்டைப் பெருக்குவோம். தமிழில் மின்னஞ்சல் எழுதுவோம்.

இதைத் தவிர உலகத் தாய்மொழிநாள் விழா, சித்திரை புத்தாண்டு தினவிழா என பல்வேறு தமிழ் விழாக்களை சிறப்பாக நடத்தியும், சென்னையில் உள்ள சாலைகளுக்கு தமிழ்ப் பெயரை சூட்டியும் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடம் சங்கத்தமிழ் காட்சி கூடம் உலகத் தமிழர் பண்பாட்டுமையம் போன்றவற்றை நிறுவியும் மொழி விழிப்புணர்வை ஏற்படுத்தி தமிழை தன்னிகரற்ற மொழியாக்கி அலங்கரித்து அழகுப் பார்ப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள்.

சென்னை மாவட்ட அளவில் ஆட்சிமொழித் திட்டத்தில் சிறந்து விளங்கிய கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் (கடனற்றவை) அலுவலகத்திற்குக் கேடயமும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பித்தார்.

சிறப்புரையாற்றிய ‘தினமணி’ ஆசிரியர் கே. வைத்தியநாதன் அவர்கள் பேசும்போது உலகத்திலேயே மொழிக்காக முதன்முதலாகப் போராட்டம் நடத்தியவர்கள் தமிழர்கள்தான் என்ற செய்தியை பதிவு செய்கின்றேன். உலகத் தாய்மொழி நாள் கொண்டாட வேண்டும் என்று ஐக்கிய நாட்டுச் சபை அறிவித்ததன் நோக்கம் என்னவென்றால் அழியும் நிலையில் இருக்கும் மொழிகளைக் காப்பாற்ற வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவேதான்.

வரும் நூறாண்டுகளில் அழிந்துவிடக்கூடிய 25 மொழிகளில் தமிழ் 8ஆவது இடத்தில் இருப்பதாக தெரிவித்துள்ளது. இதை நாம் ஒரு எச்சரிக்கையாக எடுத்துக் கொண்டு தமிழ்மொழியை காப்பாற்ற உறுதி ஏற்க வேண்டும் என்று கூறினார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கா.மு.சேகர் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். இந்நிகழ்வுக்கு முன்பாக உலகத் தாய்மொழி தொடர்பாக 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம்' என்ற தலைப்பில் சிறப்புக் கவியரங்கமும் 'தேமதுரத் தமிழோசை' என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கமும் நடைபெற்றன. இறுதியாக தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் கோ.செழியன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**